பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 6உ (22—9—67) வெள்ளி ★ வெளியூர் : புரட்டாசி 7உ (23—9—67) சனி [இதழ் : 84

# மகாத்மாவே உண்மையிடம் வெற்றி காணவில்லை!

## 'மது' பற்றி முழுமையான முடிவுக்கு வாருங்கள்--- 'ஹாம்லட்'டுக்கு நேர்ந்த கதி காங்கிரசுக்கு வேண்டாம்!

### 'மதுவிலக்குச் சட்டம் ஏன் ?'--- முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, செப். 22—

" 'பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காததனால்தான் 'ஹாம்லட்' தோல்வியுற்றான்' என, ஷேக்ஸ்பியர் கூறுகிறார். நாட்டின் முன்னோடியான--முதல் பெரும் அரசியல் அமைப்பான காங்கிரசுக் கட்சிக்குச் சொல்லிக்கொள்வேன்—'ஷேக்ஸ்பியரின் ஹாம்லட், 'வாழ்வதா ? வேண்டாமா ?'— To Be or Not To Be) என்று இருந்ததைப் போல், மதுவிலக்குப் பிரச்சினையில், 'இப்படியா--அப்படியா' என மயங்கி நிற்க வேண்டாம் ; ஹாம்லட்டுக்கு நேர்ந்த கதி காங்கிரசுக்கும் வேண்டாம்' என்று !

" மதுவிலக்குப் பற்றி ஒரு மொத்தமான முழு முடிவுக்கு வாருங்கள் ; அப்போதுதான், இங்கே அமர்ந்திருக்கும் நண்பர் ஸ்டீட், அடுத்தமுறை அமெரிக்காவிலிருந்து வரும் போது,

**'நாங்கள் எல்லோரும் மதுவிலக்கினை ஆதரிப்பவர்கள்'**

என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள முடியும் !

" இப்போதும் மதுபான வகைகளுக்கு அனுமதி கேட்டு என்னிடம்வரும் வெளிநாட்டுக் காரர்கள்—என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து—குறும்புடன் சிரித்து—வேடிக் கையும் விநயமும் கலந்து கேட்கிறார்கள்—'மதுவிலக்கா -- சென்னையிலா -- ஆந்திரத்தில் இல்லையே -- மராட்டியத்தில் கிடையாதே - ஏன் இங்கே மட்டும் ?' என்று கேட்கிறார்கள். உண்மையாகச் சொல்லுகிறேன்—அந்த இடத்தில், என்னால் பதிலளிக்க முடியவில்லை !

" எனவேதான் சொல்லுகிறேன்—இங்கே மதுவிலக்குப் பற்றி ஆணித்தரமாக அழகாகப் பேசிய எனது நண்பர் செங்கல்வராயன், 'தனிப்பட்ட மனிதர்' என்ற முறையில் அல்ல—நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில்கூட அல்ல—ஒரு காங்கிரசுக்காரர் என்ற அடிப்படையில்—இப்பிரச்சினையை, 'அந்த மன்ற'த்துக்கு எடுத்துச் செல்லட்டும் ; கிடைக்கின்ற அடுத்த வாய்ப்பை அவர் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில்,

**" காங்கிரசல்லாத ஒரு மாநில முதலமைச்சர் மதுவிலக்கில் இப்படி பிடியாக இருக்கும்போது, காந்தியவாதிகளாகவும் இருக்கும் காங்கிரசுக்காரர்கள் ஏன் முழு மதுவிலக்கைச் செயல்படுத்தவில்லை "**

என்று கேட்டுத் தீர்மானம் கோண்டுவந்து விவாதிக்கட்டும் !

" அவர் அதில் வெற்றி பெற்றால் நாடே பாராட்டும் ! அவர் அதில் தோல்வியுற்றால்கூட, அவர்மீது நான் கொண்டிருக்கும் மதிப்பு ஆயிரம் மடங்கு அதிகரிக்கும் ! வேறு எந்தக் காங்கிரசுக்காரரையும் இதைப்பற்றி அணுகிச் சொல்வதற்கு எனக்குத் 'தைரியம்' இல்லை ! ஏனெனில், அவர்களெல்லாம், ஒன்று—மிகப் பெரியவர்களாக இருக்கிறார்கள் ; அல்லது மிகச் சிறியவர்களாக இருக்கிறார்கள் !

" எனவேதான், என்னைப்போலவே சாதாரணமாக இருக்கும் செங்கல்வராயனை, இத்துறையில் அணுகுகிறேன்—எங்கள் நெடுநாளைய நட்பு அத்தகையது !

**" எந்தெந்தப் பிரச்சினைகளிலோ 'தேசியம்' பேசுகிறீர்கள் !---காங்கிரசு நண்பர்களே ! மது ஒழிப்பை ஒரு தேசியப் பிரச்சினையாக முதலில் மேற்கொள்ளுங்கள் ! உங்கள் கட்சியைத் தாக்குவதாகத் தயவு செய்து எண்ணவேண்டாம்---எனது இதயத்திலிருந்து வருகிற சொல் இது ! வீணான -- வெறும் பேச்சு என்று நினைக்க வேண்டாம்---உள்ளத்து ஆசை இது !"**

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று மாலை இராஜாஜி மண்டபத்தில், 'சர்வதேச மனக் கட்டுப்பாட்டுக் கழக'த்தின் ஆதரவில் நடந்த கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும்போது, நீண்ட கைதட்டலுக்கிடையேயும் உணர்ச்சி அலைகளுக்கிடையேயும் கூறினார்கள்.

திரு. டி. சி. சுந்தரராசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இக்கழகத்தின் அனைத்துநாட்டு இயக்குநர் திரு. ஸ்டீட், மதுபானம்—புகைப்பழக்கம் போன்ற தொடர் பழக்கங்களிலிருந்து, மனிதன், எப்படி மனக் கட்டுப்பாட்டின் மூலம் விடுதலை பெற வேண்டுமென்பதை பல படங்கள் மூலமாக விளக்கினார்.

நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர் திரு. டி. செங்கல்வராயன் உரையாற்றினார்.

இராஜாஜி, பக்தவத்சலம் முதலியோரிடமிருந்து வர இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து, வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

துவக்க உரை — முடிவுரை ஆகிய இரண்டினையும் ஆங்கிலத்தில் ஆற்றிய அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

" மதுப் பழக்கம் வாழ்க்கை முறைகளை மட்டுமல்ல — வாழ்க்கை நெறிகளையும் கெடுக்கிறது !

காலா காலமாக நாம் குடிப்பழக்கத்தை ஒரு 'தீமை'யாகவே கருதி வந்திருக்கிறோமே தவிர, 'பிரச்சினை'யாக மட்டும் எண்ணியதில்லை !

யாராவது தாறுமாறாக நடந்தால் —வழக்கத்துக்குமாறாக நடந்தால்கூட—'என்ன, குடித்திருக்கிறாயா?' என்று கேட்பதுதான் நமது வழக்கம் !

நமது திரைப்படங்களிலும், நாடகங்களிலும்கூட நீங்கள் கவனித்திருக்கலாம் — கதாநாயகர்கள் குடிக்கமாட்டார்கள்; வில்லனாக வருபவர்தான் குடிப்பதாகக் காட்டப்படுவார்; இந்தவகையில், நமது கதாசிரியர்கள்கூடப் பாராட்டப்பட வேண்டியவர்களாகிறார்கள். கதைகளில் குடிப்பது தகாத காரியமாகவே சித்தரிக்கப்படுகிறது !

★ நல்லவர்கள் குடிப்பதில்லை!

★ குடிப்பவர்கள் நல்லவர்களல்லர் !

★ நல்லவர்களும் குடிக்கும் போது கெடுகிறார்கள் !

இந்த உண்மையை அனைவரும் உணர்கிறார்கள்; ஆனால் நடைமுறையில்தான் சில பலர் தவறுகிறார்கள் ! இது மனிதத் தவறு !

உண்மை உணரப்படுகிறது ; ஆனால் நடைமுறைக்கு வரக் கடினமாக இருக்கிறது.

**மனிதர்களுக்குள் பெரியவராக இருந்த காந்தியடிகளே, 'உண்மையிடம் வெற்றி கண்டதாக'க் கூறவில்லை; 'உண்மையிடம் சத்தியப் பரிசோதனை நடத்தியதாக'த் தான் சொல்லியிருக்கிறார் !**

அந்த மேதைக்கே அப்படிப்பட்ட நிலை என்றால், சாதாரண மனிதர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை !

எனவேதான், **'மதுப்பழக்கம் தீது' என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும், அதனை நடைமுறைக்குக் கொண்டுவரச் சட்டம் தேவைப்படுகிறது !**

இன்று காலையில்கூட எனக்கு வந்த கடிதங்களில் ஒன்று—இப்பிரச்சினை பற்றி எனது நண்பர் ஒருவரால் எழுதப்பட்டிருந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

# அப்போதே
செய்தது
# ஜஸ்டிஸ் கட்சி!



" என்னை, 'ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன்' என்றுசொல்லித் தாக்குவதில், காங்கிரசுக் காரர்களுக்கு ஒரு மகிழ்ச்சி !

" ஆம் ; நான் ஜஸ்டிஸ் கட்சி உறுப்பினராக இருந்தவன் தான் ; அந்த ஜஸ்டிஸ் கட்சி தான்—காங்கிரசுக்கும் முந்திக் கொண்டு — முதன்முதலில், 'மதுவிலக்குக் கொள்கை அவசியம்' என முடிவு செய்தது !

" இங்கே இருக்கும் நண்பர் செங்கல்வராயனுக்குச் சொல்லிக்கொள்வேன்—'அந்த மதுவிலக்குக் கொள்கையை மேலும் தீவிரப்படுத்தத்தான் ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து இங்கே வந்திருக்கிறார் அமெரிக்க நண்பர் ஸ்டீட்' என்று."

# மயங்கியவர் மயக்கினார்!

[எஸ். ஆர்:]

'மகாத்மாவை நினைவுபடுத்தினார் அண்ணா' என்று காந்தியடிகளிடம் நெருங்கி வாழ்ந்த மிகச் சிலரில் முக்கியமானவரான ஜெயப்பிரகாஷ் நாராயணன், சென்னை மெமோரியல் மண்டபத்தில் கூறியதற்குச் சரியாக 24 மணி நேரம் கழித்து அதே சென்னையில்—சரித்திரப் பிரசித்திப் பெற்ற இராஜாஜி மண்டபத்தில் — காந்தியடிகளின் உருவப்படத்தின் கீழ் நின்றுகொண்டு—உணர்ச்சி அலைகளுக்கு இடையில்—உருக்கமான பிரதிபலிப்புக்கு மத்தியில்—

" 'மது' என்றால் 'எது' என்று கேட்கும் பேறு பெற்றவர்கள் நமது சந்ததியினர் ; அவர்கட்கு நாம் 'அராக்'குகளையும், ஆல்கஹாலையும் காட்டாமல் இருப்போம் ; இந்த ஒரு நோக்கத்துக்காகவாவது—இனி நமது இல்லங்களில் அழுகுரல் அவலம் நடைபெறக்கூடாது என்ற காரணத்துக்காகவாவது—மதுவிலக்குத் திட்டம் நாடு முழுமையும் விரிவாகட்டும் "

என்று இதயத்தைத் திறந்து காட்டிப் பேசினார் அண்ணா.

" அரசியல் எதிர்ப்புகளுக்கு இடையிலும் - பொருளாதாரப் பற்றுக்குறை நிலையிலும்—மாறுபட்ட சூழ்நிலையிலும்—மனித சமுதாயத்தின் நன்மையை விரும்பி, 'மதுவிலக்குத் தொடரும்' என்று அண்ணா அறிவித்ததுதான் '1967' கொடுத்த மகிழ்ச்சிகளுக்கெல்லாம் மேலான மகிழ்ச்சியாகும்" என்று தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்—சர்வதேச மனக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் இந்தியப் பிரிவுத் தலைவர்.

நன்றி கூறும்போதும், வழக்கமாகக் கூறும் உபசார வார்த்தைகளை ஒதுக்கிவைத்துவிட்டு அண்ணா அவர்களைப் பார்த்து,

" எத்தனையோ வேலைகளுக்கிடையில் இங்கே வந்து இந்த அழகிய மாமன்றத்தில் நீங்கள் ஆற்றிய உரை—காட்டிய ஆர்வம் வீண் போகாது ; நாளிதழ்கள் வாயிலாக உலகின் நாலா பக்கங்களுக்கும் சென்று பயன் கொடுக்கும் "

என்று—உள்ளத்தை நெகிழ வைத்த அவரது ஆங்கிலப் பேச்சினைப் பற்றிக் குறிப்பிட்டார்.

" நீங்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற செயல், 'மதுவிலக்குத் தொடரும்' என்ற உங்கள் அறிவிப்பு ! தமிழகம் மட்டுமல்ல—இந்தியாகூட அல்ல—மனித சமுதாயமே மதுவிலக்கின் காவலனாக உங்களை ஏத்திப் புகழ்கிறது "

என்று வார்த்தைகளால் கூறி மகிழ்ந்தார்—திரு. செங்கல்வராயன்.

" மனிதன், இயந்திரங்களை—ஏன்—இயற்கையையே கட்டுப்படுத்திவிட்டான் ; ஆனால், தன்னைத்தவிர " என்று—மனிதர்களிடையே இருந்துவரும் மது, புகை போன்ற தொடர்ப் பழக்கங்களை நீக்கப் பாடுபட்டுவரும் சர்வதேச மனக் கட்டுப்பாட்டு இயக்கத்தின் தலைவர் -- அமெரிக்கர் -- ஸ்டீட், தனது விளக்க உரையின்போது,

" மதுவிலக்கில்—மனித நன்மையைப் புரிந்துகொண்ட வகையில்—இப்படிப்பட்ட படிப்பினையைக் காட்டும் விந்தை மனிதர் நீங்கள் "

என்று முதலமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

'I AM AN ADDICT TO PROHIBITION'—'நான் மதுவிலக்கில் மயக்கம் கொண்டவன்' என்று சில நாட்களுக்கு முன்னர், கோவையில், செய்தியாளர்களிடையே அண்ணா அவர்கள் கூறியது எத்துணைப் பொருத்தம் -- எவ்வளவு உண்மை என்பது, நேற்றைய இராஜாஜி மண்டபத்து நிகழ்ச்சி மெய்ப்பித்துக்காட்டியது!

அரசியல் இயக்கம் கண்டவராக இல்லாது—சமுதாயத்தின் தலைவராக இல்லாது—முதலமைச்சராகக் கூட இல்லாது, ஒரு மனிதராய் -- நலனை விரும்பியவராய் -- மதுவிலக்கில் தனக்கிருக்கும் 'மயக்க'த்தை—நம்பிக்கையைத் தெரிவித்து அண்ணா அவர்கள் ஆற்றிய இதயம் திறந்த பேச்சு, அங்கே வந்திருந்தோரை மயக்கியது !

ஆம் ! 'மது வேண்டாம்' என்பதற்கு அந்த மயக்கம் அவசியம் வேண்டும் !

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 6 (22—9—67) வெள்ளி

# நாகாலாந்து அறைகூவல்

ஆட்சி மொழி—பாட மொழி—தொடர்பு மொழி ஆகிய எந்தத் துறையிலும் ஆங்கில மொழி இருந்திடக் கூடாது என்பதற்கு, பல காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. அக்காரணங்களில் முக்கியமானதாகக் கூறப்பட்டு வருவது, 'ஆங்கில மொழி, இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கிலேயர்களின் மொழி' என்பது ஒன்றாகும்.

அந்நிய மொழி என்பதற்காக ஆங்கில மொழியை அடியோடு அகற்றிவிட வேண்டும் எனக் கூறிவருகின்ற அதே மூச்சில், 'ஆங்கில மொழி இருக்கின்ற இடத்தில் இந்தி மொழியை ஏற்றிவிட வேண்டும்' என்பது இந்தி வெறியர்களின் முடிவு. அம்முடிவிற்கொப்ப, இந்தி மொழி, அரசியல் சட்டத்தில் இடமும் பெற்றுவிட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தில் இந்தி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, 'அதனை ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும், மாநிலங்கள் அனைத்தும் ஏற்றுக்கொண்டுவிட்டன' என அழுத்தந்திருத்தமாகக் கூறப்பட்டு வருகிறது. இவ்வாறு கூறி வருகின்றவர்களின் முன்னோடியாக, இந்தியத் துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் இருந்துவருகின்றார்.

இந்தி மொழி குறித்துத் தாம் கொண்டிருக்கின்ற முடிவை, அண்மையில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் அழுத்தந்திருத்தமாக மொரார்ஜி தேசாய் வெளியிட்டார். அவருடைய இக்கூற்றை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், 'இப்பொழுது வழக்கில் இருந்துவருவதைப் போன்றே ஆங்கிலம் தொடர்ந்து இருந்துவர வேண்டும்' என்றும், 'அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும்' என்றும் தமிழகச் சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள், தேசாய் அவர்களின் முகத்துக்கு நேராக இடித்துரைத்தார்.

'இந்திய மட்டத்தில் ஆங்கில மொழியே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்துவர வேண்டும்' எனக் கோருகின்ற தமிழக அரசு, மாநில மட்டத்தில் தமிழ் மொழியைத்தான் ஆட்சிமொழியாகக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ற வகையில் ஏற்கனவே சட்டமும் இயற்றப்பட்டிருக்கிறது.

ஆனால், மொழித் துறையில் தமிழக அரசின் முடிவுக்கு முழுதும் மாறான ஒரு முடிவை, நாகாலாந்து என்ற சின்னஞ்சிறிய மாநிலம், சட்டமாக இயற்றியிருக்கிறது; அதாவது, ஆங்கில மொழிதான் தனது ஆட்சிமொழி என நாகாலாந்து சட்டமன்றம், சட்டம் ஒன்றை இயற்றி இருக்கிறது.

மொழித் துறையில், நாகாலாந்து இயற்றியுள்ளதைப் போன்ற சட்டத்தை, இதுவரை எந்த ஒரு மாநிலமும் இயற்றியது கிடையாது. சிறிய மாநிலமான நாகாலாந்தில், இப்பொழுது பதினான்கு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அம்மொழிகளில் எதற்கும் சொந்த எழுத்து கிடையாது; அவையனைத்தும், ஆங்கில எழுத்துக்களாலேயே எழுதப்பட்டு வருகின்றன. இதைக் காரணமாகக் காட்டியே, ஆங்கில மொழியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டு, நாகாலாந்து சட்டமன்றம், அதற்கான சட்டத்தை இப்பொழுது இயற்றிவிட்டிருக்கிறது.

'ஆங்கில மொழியே மாநிலத்தின் ஆட்சிமொழி' என, நாகாலாந்து இப்பொழுதுதான் சட்டமியற்றியது என்றாலும், மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே, 'சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஆங்கில மொழியில்தான் நடைபெற வேண்டும்' என முடிவுகட்டியிருக்கிறது; அம்முடிவை உள்ளடக்கி, சட்டமொன்றையும் ஏற்கனவே இயற்றி இருக்கிறது.

ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ், நாகாலாந்து சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றுவந்திருக்கின்றன. இப்பொழுது இயற்றப்பட்டிருக்கின்ற மொழிச் சட்டத்தினால், 'பாட மொழி உட்பட அனைத்துக்கும் ஆங்கில மொழி பயன்படுத்தப்பட வேண்டும்' என்ற புதிய நிலை தலைதூக்கியிருக்கிறது.

ஆங்கில மொழியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை இயற்றிய அளவுடன் நாகாலாந்து இருந்துவிடவில்லை; 'அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற மொழிகள் பட்டியலில், ஆங்கில மொழியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்ற கோரிக்கையையும், தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறது—சட்டமன்றத்தில்.

நாகாலாந்தின் இக்கோரிக்கையை, இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற அதிகாரபூர்வமான இக்கோரிக்கை, இந்திய அரசாங்கத்தைப் பெரும் சோதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

மொழி பற்றி நாகாலாந்து சட்டமன்றம் இயற்றியுள்ள சட்டம், மொரார்ஜி தேசாய் போன்ற இந்தி வெறியர்களுக்கு, எரிச்சலை உண்டாக்கத்தான் செய்யும். சட்டமன்றம் செய்திருக்கின்ற இம்முடிவைக் கண்டு, தேசாய்க்கு மிதமிஞ்சிய சீற்றம் ஏற்படத்தான் செய்யும். அவருக்கு ஏற்படக்கூடிய எரிச்சலும் சீற்றமும் மட்டுமே, நாகாலாந்து சட்டமன்றம் இயற்றியிருக்கின்ற மொழிச் சட்டத்துக்கு, சமாதானமாகிவிடாது.

'ஆங்கில மொழி தொடர்ந்து இருந்துவருவதற்கு பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியைச் சட்டமாக்க வேண்டும்' என்ற கோரிக்கையை எதிர்க்கின்ற இந்தி வெறியர்கள், 'இந்தி பேசாதவர்கள் விரும்புகின்றவரை என்றால், சிறிய பிரதேசமான நாகாலாந்துகூட இந்தி ஆட்சி மொழியாவதைத் தடுத்து நிறுத்திவிட முடியும்' என, இப்பொழுது கூறிவருகின்றனர். இப்பொழுது அந்த நாகாலாந்து, ஆங்கில மொழியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டு சட்டமியற்றியிருப்பதுடன், 'அரசியல் சட்டத்தில் ஆங்கில மொழிக்கு இடம் இருக்கவேண்டும்' என்ற கோரிக்கையையும் விடுத்திருக்கிறது.

ஆங்கில மொழிபற்றி நாகாலாந்து செய்திருக்கின்ற முடிவுக்கு, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும், மொரார்ஜி தேசாய் போன்ற இந்தி வெறியர்களும் என்ன செய்யப்போகின்றார்கள்?

ஆங்கில மொழிபற்றி நாகாலாந்து சட்டமன்றம் இயற்றியிருக்கின்ற மொழிச் சட்டம், இந்தி வெறியர்களுக்கு விடுத்த அறைகூவலே ஆகும்!

—இரா. செ.

# 'தமிழகத்தின் உண்மை வரலாற்றினைத் தொகுத்தளிப்பீர்'

## 'அந்தப் பணிக்குத் தலைமை தாங்க முழுத் தகுதிபடைத்தவர் அப்பாதுரையாரே'

### பன்மொழிப் புலவர் மணிவிழாவில் அறிஞர் அண்ணா தலைமையுரை

கடந்த 20—9—67 அன்று மயிலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடந்தேறிய பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் மணிவிழாவிற்குத் தலைமைதாங்கிப் பொன்னாடை போர்த்திய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை வருமாறு;—

"பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்களின் மணிவிழாவிலே கலந்துகொள்வதிலே நான் மிகுந்த உற்சாகமடைவதற்கும், இதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதுவதற்கும் காரணம், பல ஆண்டுகளாக அப்பாதுரையார் அவர்களுடன் நெருங்கிப் பழகி அறிந்தவன்—அவருடைய தமிழ்த் தொண்டால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நற்பயனை உணர்ந்தவன்—அவர்கள் குடும்பத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டவன் என்பதுதான்.

ஒருவரை நாம் மதிக்கும் நேரத்தில் மாற்றுக் கருத்துக்கொண்டவர்களும் மதிக்கிறார்கள் என்பதை அறியும்போது ஏற்படுகிற இனிமையைவிட, வேறு ஓர் இனிமை இருக்க முடியாது.

அப்பாதுரையாரை நாம் எந்தக் கோணத்திலிருந்து பாராட்டுகிறோமோ அதையல்லாமல் அவருடைய தனித் திறமையை அறிந்தவர்கள், அவருடைய தொண்டின் மேன்மையை அறிந்து பல்வேறு கோணங்களில் இருப்பவர்களும் பாராட்டிப் பேசுவதைக் கேட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நம்முடைய அப்பாதுரையார் அவர்கள் ஆசிரியராகத் தம் பணியைத் துவக்கிய காலத்திலிருந்து, அறப் போராட்டங்களில் ஈடுபட்ட கட்டம் வரை அவருடைய தனித் திறமையை அறிந்திருக்கிறோம்.

அவர், தமிழின் மூலத்தையே ஆராய முனைந்தவர்; தமிழ் இனத்தின் வரலாற்றைத் துருவித் துருவி ஆராய்வதன்மூலம் தமிழ் இனத்துக்கும் மற்ற இனத்துக்குமிடையே—பகை மூட்ட அல்ல-தோழமையைஏற்படுத்த நற்பணி செய்திருக்கிறார். அவர் அறிந்த அனைத்தையும் எழுதி ஏடாக்கினால், அவை இந்த மண்டபமே நிறையும் அளவுக்கு இருக்கும்.

நமது அப்பாதுரையார் அவர்கள் எந்த நேரத்தில் பார்த்தாலும், சிந்தனை—படிப்பு—எழுத்து என்று இப்படியே தம் வாழ்நாளை மிகச் சிறப்பாகக் கழித்திருக்கிறார்!

இந்த நாட்டில், 'அறிவாளன் என்று அறிந்தாலே ஆபத்து—'அவன் என்ன பெரிய அறிவாளியா?' என்று கேட்பதன் மூலம், தன்னிடம் அறிவு இருக்கிறது எனக் காட்டிக்கொள்ளச் சிலர் முனைவார்கள்! இத்தகைய அறிவுப் பணி செய்வதே பெரிய சிக்கல்; ஆனால், சிக்கலிலேதான் சுவை இருக்கும்.

மேனாடுகளில் எந்த அளவு இப்பணியில் ஈடுபடுகிறார்களோ அந்த அளவுக்கு இங்கே ஈடுபடுவது என்பது மிக மிகக் கடினம்.

பன்மொழிப் புலவர் அவர்கள் தம் வாழ்க்கையைக் கரடுமுரடான பாதையில் நடத்தி, மிகத் தெளிவான தமிழறிவைத் தமிழகம் ஏற்கும் அளவுக்குப் பணி புரிந்திருக்கிறார். இவரது வாழ்க்கை பூந்தோட்டமாக அமைந்திடவில்லை; எனினும், வாலிப உள்ளத்தோடு—மாற்றாரின் இழிமொழிகளையும் ஏசல்களையும் தாங்கிக்கொண்டு—தம் பணிகளைச் செய்திருக்கிறார்.

நண்பர் கி. ஆ. பெ. விசுவநாதம் சொன்னதுபோல், இவர் விரும்பியிருந்தால் ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஆகியிருக்க முடியும்.

ஒவ்வொன்றையும் பற்றி, 'இப்படிச் செய்வது சரியா?' என்ற எண்ணம் அவருடைய எண்ணத்தில் ஊடுருவிக் கொண்டிருக்கும்.

சிறிது காலம் பள்ளியாசிரியராக இருப்பார்; பிறகு அது பிடிக்காமல், பத்திரிகாசிரியராக ஆவார்; அதன் பிறகு, தமிழ்ப் பாதுகாப்புப் பணியில் குதிப்பார்; பின்னர், 'போராட்டத்தினால் பயனில்லை' என்று கருதி, ஏடுகளை எழுதியளிக்க எண்ணுவார். அந்தந்த நேரத்தில் தோன்றுவதில் ஈடுபடுவார்.

பாடுபவர், பல்வேறு இசை நுணுக்கங்களையும் கையாண்டாலும். எப்படி ஒரு குறிப்பிட்ட சுதிக்குள்ளாகவே நிற்கிறாரோ—அதேபோல் இவரும், பல்வேறு பணிகளில் ஈடுபட்டாலும் தம் வாழ்நாளை ஒரு சுதிக்குள்ளாகவே—'தமிழ் வாழ வேண்டும்; தமிழ் வளர வேண்டும்' என்ற கட்டத்துக்குள்—ஒரு குறிப்பிட்ட கட்டுக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார்! இது மிகப் பெரிய—விரும்பத்தக்க இலட்சியமாகும்!

மாறுபட்ட கருத்துடையவர்களும், தமிழ் மொழிப் பிரச்சினையில் இன்று ஒன்றுபடுகிறார்கள். நானும் குன்றக்குடி அடிகளாரும், தோற்றம்—பேச்சு—நடவடிக்கைகள்—இருக்கும் இடம்—ஆகியவற்றில் மாறுபட்டவர்கள் என்றாலும், எங்கள் இருவரையும் தமிழ் ஒன்றுபடுத்தியிருக்கிறது! இதுதான் நாம் கையாள வேண்டிய சுதி! இதற்குள் எல்லாவற்றையும் நாம் காட்டலாம்! இது ஏற்படத் தமிழ் நாட்டில் முப்பது ஆண்டுகள் பாடுபட வேண்டியிருந்தது! இதற்கு அடங்கி நடப்பவர் எத்தனை பேர் என்பதை நாம் கணக்கெடுத்துப் பார்த்தால், பயனின் அளவைக் காணலாம்.

இந்தச் சுதியை நமக்கு அமைத்துத் தந்தவர்களில் அப்பாதுரையாரும் ஒருவர்! அப்படிப்பட்ட முறையில் அமைவதுதான் அடிப்படையான தொண்டு!

மேலை நாடுகளில் ஒரே ஒரு புத்தகம் எழுதினாலே, ஒருவர் தம் வாழ்நாளைக் கழித்துவிட முடியும்—அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு! இங்கோ, ஓர் ஆசிரியர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார் என்றாலே, வீடு மாற்றுவதைப் பார்க்கிறோம். அந்தப் புத்தகத்தை அச்சிடுவதற்கு அவர் பட்ட கடனை அடைக்கமுடியாமல், கடன்காரர்களுக்கு அஞ்சி—தென் சென்னையில் வீடு இருந்தால் வட சென்னைக்கும், வட சென்னையில் இருந்தால் தென் சென்னைக்கும் குடி போவார்கள்; அப்படிப்பட்ட நிலை இங்கு இருக்கிறது.

இங்கு புத்தகம் எழுதுவதும், அதன் மூலம் வருவாய் தேடுவதும் அவ்வளவு கடினம்!

புலமைக்கும்—பொருளாதாரத்துக்கும் உள்ள தொடர்பினை, அருள் துறையில் தேர்ச்சிபெற்ற குன்றக்குடி அடிகளாரே சொன்னது எனக்கு மெத்த மகிழ்ச்சியைத் தந்தது.

அவர் சொன்னபடி நாட்டில் நிலைமை ஏற்பட்டிருந்தால், நாம் இன்னும் சற்றுப் பயனை அதிகமாகப் பெற்றிருக்க முடியும்.

புத்தகம் வாங்கும் பழக்கம் எல்லோருக்கும் ஏற்படவேண்டும்.

அப்பாதுரையாரின் நூல்களை—ஏடுகளை வீடுதோறும் வாங்கி வைக்க வேண்டும்.

அப்பாதுரையார் எழுதிய நூல்களில், 'தென்னாட்டுப் போர்க்களம்' என்ற நூல், என்னை மிகவும் கவர்ந்த ஒன்றாகும். அந்த நூலின் ஒரே ஓர் ஏட்டை எழுத அவர் எத்தனை ஆயிரம் ஏடுகளைத் தேடிப் பார்த்திருக்க வேண்டும் — எத்தனை ஆயிரம் கவிதைகளை -- புத்தகங்களைச் சேகரித்துப் பார்த்திருக்கவேண்டும்—என்பதை எண்ணியெண்ணி, வியந்தேன்!

புத்தகம் எழுதுவோரை மற்ற நாடுகளிலெல்லாம் வித்தகர்களாகப் போற்றுகிறார்கள். இந்த நாட்டிலோ, 'புத்தகம் எழுதி, இருந்த பணத்தைப் பாழாக்கிக்கொண்டவர்கள்' என்ற பழிச் சொல்தான் கிடைக்கும்!

இந்த நிலையிலும் நமது அப்பாதுரையார் அவர்கள், தமிழ் மொழிக்கு ஏற்றந்தரும் பல அரிய நூல்களை எழுதியிருக்கிறார்!

நம்மால் மதிக்கத்தக்கவர்களின் வாழ்க்கை வரலாறு முழு அளவுக்குத் தமிழகத்தில் இல்லை. திரு. வி. க. போன்றவர்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பெடுத்துத் தொகுத்து ஏடாக்கி நூலாக்கி தருவதில் இன்றைய புலவர் பெருமக்கள் ஈடுபடவேண்டும்.

மறைமலையடிகளைப் பற்றியோ தியாகராய செட்டியார் பற்றியோ வாழ்க்கைக் குறிப்புகள் இல்லை.

தமிழ்ப் பெரும் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகள் நம்மிடத்திலே இல்லை.

அப்படிப்பட்ட பெரியார்களின் வரலாற்றை மறந்துவிட்டால் நம்முடைய மரபு பிறகு கிடைக்காது!

'மரபு' என்பதே, இப்போது 'மறதி' என்றாகிவிட்டது!

பண்டைத் தமிழ் மன்னர்களைப் பற்றிச் சரியாக எந்த நூலிலும் குறிப்பிடவில்லை!

நமது பள்ளிச் சிறுவர்களின் பாட நூலைப் பார்த்தால், 'இராஜராஜ சோழனுக்கு இராஜேந்திரச் சோழன் மகன்' என்று சொல்லுவாருமுண்டு; 'தம்பி' என்பாரும் உண்டு என்றிருக்கும்!

'கரிகால்வளவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்பது உண்மை' என்பாரும் உண்டு; 'இல்லை என்பாரும் உண்டு' என்று இப்படித்தான் எழுதப்பட்டிருக்கும்!

இத்தகைய பணியில் ஈடுபட்டு ஆராய்ச்சி நடத்திடப் பல்வேறு அலுவல்களைக் கொண்டுள்ள என்னால் முடியாது.

வரலாற்று ஆசிரியர்கள்தாம் இந்தப் பணியை மேற்கொண்டு உண்மையான தமிழ் வரலாற்றை உருவாக்க வேண்டும்.

(4 ம் பக்கம் பார்க்க)

வரப்பெற்றோம்

## ‘திருவிளக்கு’-- அண்ணு மலர்

நாடாளுமன்ற தி. மு. க. கொறடாவும், சமூக முன்னணித் தோழருமான திரு. க. இராசாராம் அவர்களை ஆசிரியராகக்கொண்ட ‘திருவிளக்கு’ வார இதழின் ‘அண்ணு மலர்’, மிகச் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன், துணைத் தலைவர் வி. வி. கிரி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி, மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம், மத்திய துணையமைச்சர் ஐ. கே. குஜ்ரல், மற்றும் கேரளம்—அரியாணு—மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், சுதந்தராக் கட்சித் தலைவர் எம். ஆர். மசானி ஆகியோர் அறிஞர் அண்ணு அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்திகளுடன் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சாதிக் பாட்சா, முத்துசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., ம. பொ. சிவஞானம், டி. எம். பார்த்தசாரதி, எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., ஜி. நாகராசன், தோழன், எஸ். ஆர்., தங்கவயல் லோகிதாசன் முதலியோர் எழுதியுள்ள கட்டுரைகளும்மலரில் இடம் பெற்றுள்ளன.

‘திருவிளக்கு’ மலருக்கென்றே டில்லி ‘சங்கர்ஸ் வீக்லி’ ஆசிரியரும், புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்டுமான திரு. சங்கர் தீட்டிய அண்ணு படமும், சிற்பி இராசாராம் நாகப்பா உருவாக்கிய அண்ணு உருவச் சிலையை பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப் படங்களும் மலருக்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன.

குறைந்த விலையில் அளிக்கப்படும் சிறந்த விருந்து—மலரின் ஒவ்வொரு ஏடும் மணக்கிறது!

[விலை ரூபாய் ஒன்று; பக்கம் 76; கிடைக்குமிடம்:— ‘திருவிளக்கு’ மவுண்ட் ரோடு, சென்னை-6]

★

## ‘விடுதலை’-- ‘பெரியார் மலர்’

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பிறந்த நாளையொட்டி ‘விடுதலை’ வழங்கும் மலர், இவ்வாண்டு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

பெரியார் அவர்களின் இயற்கை வண்ண எழில் தோற்றம் அட்டையின் முகப்பையும், திருச்சியில் நிறுவப்பட்டுள்ள பெரியார் திருவுருவச் சிலையின் புகைப்படம் அட்டையின் பின்புறத்தையும் அழகூட்டுகின்றன.

மலருக்கென்றே அறிஞர் அண்ணு அவர்களும், ஏனைய அமைச்சர்களும், தி. க.—தி.மு.க. முன்னணித் தோழர்களும் எழுதியுள்ள கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

தந்தை பெரியார் அவர்களின் அரிய கருத்தோவியங்களும், எண்ணக் குவியல்களும் நிரம்பியிருக்கின்றன.

பெரியார் அவர்களைப்பற்றி காமராசர், முன்னுள் நீதிபதி சுப்பாராவ், ராஜா சர் முத்தையா, சர். ஏ. இராமசாமி, முன்னுள் அமைச்சர் எஸ். இராமநாதன், மத்திய அமைச்சர் சந்திரசேகரன் போன்ருேரும், இன்னும் பல சான்ருேரும், தெரிவித்துள்ள கருத்துக்களும், கவிஞர் பெருமக்களின் வாழ்த்துக்களும், பகுத்தறிவு—சுயமரியாதை இயக்கக் கருத்துக்களும், ஐயா—அண்ணு சேர்ந்திருக்கும் படங்களும் சேர்ந்து, மலரை என்றும் மணம் பரப்பும் வாடா மலராக்கியிருக்கின்றன!

மலரின் மதிப்பு மிகமிக உயர்வு; விலையோ மிக மிகக் குறைவு. பெரியார் அவர்களின் சிக்கனக் கெடுபிடியையும் மீறி இந்த அளவுக்குச் செலவைப் பொருட்படுத்தாமல் அரிய மலரை உருவாக்கி வழங்கியுள்ள ‘விடுதலை’ ஆசிரியர் தோழர் வீரமணியின் சாதனை பாராட்டுக்குரியதேயாகும். (பக்கம் 210; விலை ரூ. 1.50.)

—மா. செ.

# கழக ஆட்சியில் மக்கள் ஆனந்தம்-- பெரியார் பூரிப்பு!

“உண்மையில் சொல்லுகிறேன்—எனக்குத் தெரிந்தவரையில் தி மு.க. ஆட்சி வந்தது குறித்துக் காங்கிரசுக்காரர்களைத் தவிர்த்து நாட்டில் எல்லோருமே ஆனந்தமடைகிருர்கள்.

“சாதாரணமாக நான், காங்கிரசை நிபந்தனை இல்லாமல்—சில எனது கொள்கைகளைத் தளரவிட்டு ஆதரித்த காலத்தில் (காமராசரைத் தவிர்த்து), ஒரு மந்திரியோ—ஒரு அதிகாரியோ—ஒரு காங்கிரசுப் பிரமுகனே—பிரசாரகனேகூட என்னை மதித்தது கிடையாது—என்னிடம் புன்சிரிப்புக் காட்டியதுகூடக் கிடையாது! பலர், பொருமை காட்டினுர்கள்—பலர் என்னை வெறுத்தார்கள்!

“ஆனுல் இன்று தி. மு. க. ஆட்சியில், ஐகோர்ட் ஜட்ஜ்—ஜில்லா ஜட்ஜ்—இலாகா தலைவர்கள்—உத்தியோகஸ்தர்கள், பட்டப்பகலில் தைரியமாய் வந்து--நானே வெட்கப்படும் அளவுக்கு அன்பு காட்டி மரியாதை செய்தவண்ணம் இருக்கிருர்கள்!

“கட்சித் தோழர்கள், நான் அவர்களைக் கண்டித்தது--வைதது--எதிர்த்தது எல்லாம் மறந்துவிட்டு, அன்பு--பக்தி காட்டுகிருர்கள்!

‘பொதுவாகப் பொதுமக்கள் முகத்தில் ஒரு களையே காணப்படுகிறது! அரசாங்கச் சிப்பந்திகள் எல்லோரிடமும் ஒரு திருப்திக் குறி காணப்படுகிறது! மாணவர்களும் அரசாங்கத்திடம் அதிக அன்பு காட்டுகிருர்கள்!”

—‘விடுதலை’ 16—9—67 தலையங்கத்தில்

**உண்மைக்கதை**

## ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்

### மாதம் ரூ. 10 மட்டுமே ஊதியமாகப் பெறுகின்றனர்!

“ஒரிசா மாவட்டங்களின் பல பகுதிகளில் பணியாற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் மட்டுமே ஊதியமாகப் பெறுகின்றனர்”

என்று ‘டெக்கான் ஹெரால்டு’ ஏடு, செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

★

## மத்திய அமைச்சர் வந்தார்---ஆனுல் மக்கள் வரவில்லை!

மத்திய அமைச்சர் ஒருவர், பம்பாயில் தாம் கலந்து கொள்ளவேண்டிய ஒரு கூட்டத்துக்காக அரை மணி நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று!

அமைச்சர் உரிய நேரத்துக்கு வந்துவிட்டார்! ஆனுல், கூட்டத்திற்கு எவரும் வரவில்லை!

அரை மணி நேரமும் கூட்டத்தைக் கூட்டிய பொறுப்பாளர்கள், அமைச்சரை எப்படியெல்லாமோ சமாதானம் செய்து காத்துக் கொண்டிருக்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது!

★

## ‘உயர்ந்து’ வாழ்ந்த ஒரே மனிதர்!

### 60 அடிக்குமேல் 49 நாள் ‘ஜீவனம்’!

மணிலாவில் ஒரு மனிதர், 60 அடி உயரமுள்ள தென்னை மரத்தின் உச்சியில் 49 நாட்களாக வாழ்ந்துவருகிருர்!

அவரது வயது 48!

10 குழந்தைகளுக்குத் தந்தையான அந்த ‘மர மனிதர்’, கடந்த ஜூலை 30-ந் தேதி தென்னை மரத்தின் உச்சிக்கு ஏறிச் சென்ருர்.

அண்டை அயலாரின் அச்சுறுத்தலுக்குப் பயந்து உயரே ஏறி ஒளிந்துகொண்ட அவர், தென்னங்கீற்றுகளால் தயாரித்துக்கொண்ட கயிற்றின் மூலம், வேளைதோறும் உணவினைப் பெற்றுக்கொள்கிருர்!

## விலைவாசிகள் இறங்குகின்றன!

### அமைச்சர் மதியழகன் தகவல்

திருச்சி, செப். 19—

“நல்லெண்ணெய், கடலையெண்ணெய், மிளகாய், காய்கறி போன்ற இன்றியமையாப் பண்டங்களின் விலையும், திறந்த மார்க்கெட்டில் அரிசி விலையும் இறங்குமுகமாக இருக்கிறது”

என்று உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் கவனித்து வருமாறும், அளவுகடந்து விலையேறினுல் அரசுக்குத் தெரிவிக்குமாறும் மாவட்ட ஆளுநர்கட்குத் தமிழக அரசு தெரிவித்துள்ளதாக அவர் மேலும் கூறினுர்.

### காஞ்சி---திருவண்ணுமலை இடையே அரசு பஸ்

சென்னை, செப். 21—

பஸ்களை நாட்டுடைமையாக்கும் தமிழக அரசின் திட்டத்தின்கீழ், திருவண்ணுமலைக்கும்--காஞ்சீபுரத்திற்கும் இடையேயுள்ள வழித்தடத்தை விரைவில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை நிர்வாகம் எடுத்துக்கொள்ளும் என்று தெரியவருகிறது.

## ‘பிரமச்சாரி’களே-- திருமணத்தைத் தள்ளிவையுங்கள்!

### ‘குடும்பஸ்தர்’களே -- குழந்தை பெறுவதை நிறுத்திவையுங்கள்!

**மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த மத்திய அமைச்சர் வேண்டுகோள்**

‘நாட்டின் நன்மையைக் கருதி, திருமணமாகாத வாலிபர்கள் தங்கள் திருமணக் காலத்தைத் தள்ளிவைக்க வேண்டும்; அப்போதுதான் அதிகரிக்கும் மக்கள் தொகையை ஓரளவுக்சேனும் கட்டுப்படுத்த முடியும்”

என, மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குடும்பக் கட்டுப்பாடு வாரத்தையொட்டி புதுடில்லியில் நடைபெற்ற மத்திய சுகாதாரக் கல்வி கழகத்தின் கூட்டத்தில் பேசிய டாக்டர் சந்திரசேகர் மேலும் கூறியிருப்பதாவது:—

“திருமணமானவர்களும் தடுப்பு முறைகளை மேற்கொண்டு, பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

“திருமணத்துக்கும் முதல் குழந்தைக்கும் இடைப்பட்ட காலத்தைத் தள்ளிவைப்பது, பொருளாதார அடிப்படையிலும், உடல்கூறு அடிப்படையிலும் நல்லது.

“திருமணமாகும் வயதும் கூடுமானவரை அதிகரிக்கப்பட வேண்டும். கேரளத்தில் சராசரி திருமண வயது 21 ஆக இருக்கிறது; ஆனுல், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் அது 12 முதல் 14 ஆக தாழ்ந்திருக்கிறது!”

## இந்தியா சிவப்பாகிறதாம்!

### ‘பிராவ்தா’ பெருமிதம்

“இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, நம்பிக்கையை மென்மேலும் வலுப்படுத்துகிற வகையில் வளர்ச்சி பெற்றுவருகிறது”

என்று, சோவியத் இரஷ்யாவின் அதிகாரபூர்வமான ஏடான ‘பிராவ்தா’, பெருமிதம் அடைந்துள்ளது!

அந்த இதழின் புதுடில்லி நிருபர் அனுப்பியுள்ள செய்திக் கடிதத்தின் மற்றைய குறிப்புகளாவன:—

“1965-ம் ஆண்டில் 1,01,000 ஆக இருந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, 1966-ம் ஆண்டில் 1,65,000 ஆக உயர்ந்துள்ளது!

“பீகார், கேரளம், உத்தரப் பிரதேசம், வங்காளம் ஆகிய மாநிலங்களில், கடந்த இரண்டே ஆண்டுகளில் கட்சியின் கிளைகள் இரண்டு மடங்காகியுள்ளன!

“தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளில் அதிக அக்கறை காட்டியதால், இந்த விளைவு ஏற்பட்டிருக்கிறது!

“நாடு முழுவதிலும் பல்வேறு அமைச்சரவைகளில் இடம் பெற்றிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள், சுறுசுறுப்புடன் இயங்குகிருர்கள்!

“விவசாயம்—தொழில் துறை ஆகிய தொழிலாளர்களின் பலத்தில்தான், கட்சி வளர்ச்சி அடைந்துவருகிறது!”

‘பிராவ்தா’ நிருபரின் செய்திகள், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வலதுசாரி அமைப்புத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டதாக இருப்பதாகவும், பெரும்பாலும், ‘நியூ ஏஜ்’ வார இதழில் அவ்வப்போது கவனித்துவந்த கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ‘எதிர்க் கட்சி அரசுகளில் கழக ஆட்சியே சிறந்தது’

### பேராசிரியர் இரத்தினசாமி பாராட்டு

“‘திருப்தியளிப்பதாக இருக்கிறது’ — ‘பாராட்டுக்குரிய வகையில் ஆளுகிருர்கள்’” என்று, தி மு.க. ஆட்சி பற்றி சுதந்தராக் கட்சியின் தென் பகுதித் துணைத் தலைவரும் நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான பேராசிரியர் இரத்தினசாமி, கோட்டயத்தில், செய்தியாளர்களிடையே கூறியிருக்கிருர்.

தி. மு. கழக நிர்வாகம் பற்றிக் கேட்ட செய்தியாளர்கட்கு அவர் மேலும் கூறியதாவது:—

“நாடு முழுமையிலும் தேர்தலுக்குப் பின் வந்துள்ள எதிர்க் கட்சி ஆட்சிகளில், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகம் தான் எல்லா வகையிலும் சிறப்பாக உள்ளது.”

தமிழகத்தில் தி.மு.க. — சுதந்தரா தேர்தல் உடன்பாடு பற்றிக் கேட்ட செய்தியாளரிடம் அவர் தெரிவித்ததாவது:—

“கேரளத்தில் சுதந்தரா, ‘கேரளக் காங்கிரசு’டன் கொண்ட உடன்பாடு பலன் அளிக்கவில்லை; ஆனுல், தமிழகத்தில் அதுபோல் இல்லை!

“தி. மு. க.-வுடன் மேற்கொண்ட உடன்பாட்டினுல் தான், சுதந்தராவுக்கு 22 சட்டமன்ற இடங்களும், ஐந்து பாராளுமன்ற இடங்களும் கிடைத்தன.”

## தி. மு. கழக ஆட்சிக்கு இலங்கைத் தலைமையமைச்சர் பாராட்டு

### கொழும்புப் பேச்சுவார்த்தையில் கழக நிர்வாகம் பற்றி மகிழ்ச்சி

### தமிழக அரசின் மாட்சியை வெளிநாட்டிலும் கேட்கிருர் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா!

இலங்கையில் நான்கு நாட்கள் நல்லெண்ணச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா, சேனநாயகாவைச் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசியிருக்கிருர்.

இரு தலைமையமைச்சர்களின் உரையாடல்களில், தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் தி.மு க. நிர்வாகமும் இடம் பெற்றிருந்ததாக ‘இந்து’ நாளிதழின் சிறப்பு நிருபர் தகவல் தெரிவித்திருக்கிருர்.

விவேகமானதும் இராஜதந்திரமானதுமான அடிப்படைகளில் தி.மு க. அரசு, பிரச்சினைகளை அணுகுவதற்காகவும் நிறைவேற்றுவதற்காகவும், இலங்கைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா பாராட்டினைத் தெரிவித்திருக்கிருர்.

எதிர்பார்த்ததற்கு மாருகக் கழக அரசிடம் திறமையைக் காண்பதாகவும் அவர் கருத்துத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

### சஞ்சிவி ரெட்டி யோசனை

ஐதராபாத், செப். 21—

“சிவாஜி சேனை போன்ற அமைப்பால் நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. சிவாஜி சேனையால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க அனைத்துக் கட்சி மாநாடு ஒன்றை கூட்ட வேண்டும்”

என்று ஆந்திர சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசுகையில், நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி யோசனை கூறினுர்.

நடக்க இருப்பவை :



# அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

## 23--9--67

### அருப்புக்கோட்டை

எஸ்.எஸ்.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு தியாகராயர் திடலில் ; தலைவர் : சோ. முத்து ராமலிங்க சேது ; பேசுவோர் : டி. கே. சீனிவாசன், எம். எஸ். இராமசாமி, சிவ. சண்முகசுந்தரனார்.

### சென்னை 31-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு படேல் சாலையில் ; தலைவர் : வி. தனசேகரன் ; பேசுவோர் : அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, சாதிக்பாட்சா, மற்றும் கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., க. அறிவழகன் எம்.ஏ., எம்.எல் சி., மு. மாசிலாமணி.

### கோவை

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் மாலை 6 மணிக்கு 8-வது வட்டம் உப்பிலி பாளையத்தில் ; பேசுபவர்: சி. தமிழரசு பி.ஏ.

### சென்னை 67-வது வட்டம்

நாவலர் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு எழும்பூர் வீராசாமி பிள்ளை வீதியில ; தலைவர் ; சி. இராகவன் ; பேசுவோர் : புலவர் பொன்னிவளவன், காஞ்சி கல்யாணசுந்தரம், மாதவ மனோதீபன், ஜி. கிருட்டினமூர்த்தி பி.எஸ்சி., பி.எல்., நாராயணன் பி.ஏ., எஸ். முத்து, ஜம்புலிங்கம், பொன். நடராசன்.

### முண்டியம்பாக்கம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு ; தலைவர் : கு. வடிவேல் ; கொடியேற்றுபவர் : மு. சண்முகம் எம்.எல்.ஏ.; பேசுவோர் : வேலூர் து. நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி., நா வீராசாமி எம்.எல்.ஏ., ந. கணபதி பி.எஸ்சி., பி.எல்., செ. சுந்தரராசன்.

### சென்னை 65-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பழனி ஆண்டவர் கோயில் திடலில் ; தலைவர் : ஜே சி. முனுசாமி ஷா ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஏ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ., மு வரதராசன், ச. ஜேம்ஸ்.

### கோவை 7-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு தண்டுமாரியம்மன் கோயில் பின்புறம் ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., நீலாண்டியம்மாள், எஸ். ஏ. இராசமாணிக்கம், கோவிந்தராசு எம்.எல்.ஏ., க. மருதாசலம், கேரளசுந்தரம்.

### திருச்சி

பாலக்கரை தி.மு.க. கிளை சார்பில் மாலை 6 மணிக்கு செங்குளம் மைதானத்தில் ; தலைவர் : ஆர். தண்டபாணி ; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., அன்பில் தர்மலிங்கம், ஆ. துரைராசு எம்.பி., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., சௌந்தரபாண்டியன் எம்.எல்.ஏ., அ. நடராசன், ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி, வி. கிருஷ்ணமூர்த்தி, இரா. பெருமாள், கோ. இராமாநுசம்.

### சிவகாசி

தி.மு.க., மற்றும் துணை மன்றங்கள் சார்பில் இரவு 7-மணிக்கு பூங்காத் திடலில் ; தலைவர் : கு. மனோகரன் ; பேசுபவர் : ஆலடி அருணா பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

### கலிதீர்த்தாள்குப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு துரௌபதியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : கோ. சாரங்கன் ; பேசுவோர் : வி. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ. பி.எல்.,எம்.பி , எம். இராமன் எம்.எல்.ஏ., ஜி. குபேர் எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம், சி. பி. திருநாவுக்கரசு பி.காம்.,பி எல்., எஸ். ஆறுமுகம் பி.காம். (தங்கராசு—கண்ணம்மா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### அழிஞ்சிகுப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : க. துரைசாமி ; பேசுவோர் : கூடலரசன், பி. ஜெயராமன் எம்.எல்.ஏ., எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., இரா. சம்பங்கி, மா. பா. சாரதி எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ.

### குழுமணி

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கண்ணன் திரையரங்கு அருகில் ; தலைவர் : க. இராசாமணி ; பேசுவோர் : கே. டி. கே. தேவன், என். நல்லுசாமி பி ஏ. பி.எல்., புலவர் மு. அருணா, வி. எம். கணேசன், டி. என். வையாளு, மா. முனியாண்டி.

### வேலூர் 28-வது வட்டம்

குறள் நெறி மன்றம்—எம். ஜி ஆர். படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு பிள்ளையார் கோயில் வீதியில் ; தலைவர் : மு. சண்முகம் ; பேசுவோர் : நடிகர் சௌந்தரராசன், கே. வி. கேரளீயன், மா. பா. சாரதி எம் எல்.ஏ., ஜி. குசேலர் எம்.பி., ஜி. விசுவநாதம் எம்.பி., இரா. புகழேந்தி, வே. அ. இளஞ்செழியன், குப்பண்ணா, மு. பாண்டியன், மா. பா. சாரதி.

### மீஞ்சூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : என். வி. தங்கசாமி ; பேசுவோர் : டி. வி. நாராயணசாமி, எஸ். பி. சற்குணம்.

### பாடி

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு காந்தியார் திடலில் ; தலைவர் : பி. எம். தஸ்தகீர் ; பேசுவோர் : டி. கே. பொன்னுவேலு பி.ஏ., அமுதாராகவன், ஆ பலராமன், அ. பொ. கன்னையா, ம. கோ. ஆறுமுமம், பொன். இளவழகன், மு. சு. மணி, பி. உடையப்பன், இரா. அண்ணாமலை. (காலை 9 மணிக்கு பொன் இளவழகன் கொடியேற்றுவார் ; ந. வெங்கடேசலு இனிப்பு வழங்குவார் ; மாலை 4 மணிக்கு பா.ஆ. சம்பந்தம் தலைமையில் பேச்சுப் போட்டி நடைபெறும் ; பெருமான் பி.ஏ., அண்ணா படத்தைத் திறந்து வைப்பார் ; இரவு 9 மணிக்கு அர்ச்சுனன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### கரந்தை

தி. மு. க. சார்பில் மாலை 4-மணிக்கு கடைத் தெருவில் ; தலைவர் : இரா. பொன். அழகன்; கொடியேற்றுபவர் : சி. சாமிநாதன் எம்.சி.; அண்ணா படத் திறப்பு : ஐ. கே. துரைராசன் ; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எஸ். நடராசன் எம்.சி., ஒய். சேவியர், கிரேசி சேவியர், கு. சுல்தான் எம்.சி., கார்முகிலன். (யோகராசன்—மல்லிகா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ‘நாத்திகம்’ ஆசிரியருக்குத் தண்டனை

## அன்பில் தர்மலிங்கம் தொடுத்த வழக்கில் தீர்ப்பு

திருச்சி, செப். 21—

திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. அன்பில் தர்மலிங்கம் மீது அவதூறாக எழுதிய குற்றத்திற்காக ‘நாத்திகம்’ என்ற வார ஏட்டின் ஆசிரியரான இராமசாமிக்கு ஆயிரம் ரூபாய் அபராதம்—கட்டத் தவறினால் ஆறு மாத வெறுங்காவல் தண்டனை விதித்தார்—திருச்சி மாவட்ட மாஜிஸ்திரேட்.

எதிரியின் கோரிக்கைக்கேற்ப, அபராதம் செலுத்த அக்டோபர் 5-ம் நாள்வரை தவணை அளிக்கப்பட்டது.

திருச்சியில் நடந்த தி. மு. கமக மாநாட்டில் வசூலான தொகையிலிருந்து ரூ. 20-ஆயிரத்துக்குக் கார் வாங்கியதாகவும், மிச்சம் ரூ. 10-ஆயிரத்தை சொந்தத்துக்குப்பயன்படுத்திக் கொண்டதாகவும் அன்பில் தர்மலிங்கத்தைப் பற்றி அவதூறாக ‘நாத்திகம்’ ஏட்டில் எழுதப்பட்டிருந்தது ; அதன்பேரில், அந்த ஏட்டின் ஆசிரியர்மீது அன்பில் தர்மலிங்கம் வழக்குத் தொடுத்திருந்தார்.

நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது :—

“அன்பில் தர்மலிங்கம் மீது எதிரி, அவதூறு விளைவிக்கும் குற்றம் புரிந்திருக்கிறார் ; மேலும், எதிரி இந்த மாதிரி குற்றத்தை இப்போதுதான் முதன்முதலாகச் செய்திருப்பதாகத் தோன்றவில்லை ; எனவே, போதிய தண்டனை விதிக்கவேண்டியது அவசியம்.”

### தமிழில் தீர்ப்பு

26 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில் முக்கியமான கடைசி இரண்டு பக்கங்கள் தமிழில எழுதப்பட்டிருந்தது.

‘நாத்திகம்’ ஆசிரியர், காங்கிரசுப் பிரமுகர் ஒருவரின் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டார்.

# ‘முத்தமிழில் முப்பால்’

## கலை நிகழ்ச்சி

சேலம் பொருட்காட்சிக் கலையரங்கில் 23—9—67 மாலை 7 மணிக்கு திருமதி காமாட்சி குமாரசாமி எம்.ஏ. தலைமையில், ஜலகண்டபுரம் ப. கண்ணன் அவர்கள் நிகழ்த்தும் ‘முத்தமிழில் முப்பால்’ என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

# ‘நவசக்தி’ மீது வழக்கு

## அமைச்சர் கருணாநிதி மீது அவதூறு செய்தி வெளியிட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு

சென்னை, செப். 21—

காங்கிரசு நாளிதழான ‘நவசக்தி’ ஏட்டில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதியைப் பற்றி அவதூறு செய்யும் முறையில் வெளியாகியிருந்த கட்டுரைக்காக—அந்தக் கட்டுரையை எழுதியிருந்த திரு. கண்ணதாசன், அப்பத்திரிகையின் ஆசிரியரும் அச்சிடுபவரும் வெளியிடுபவருமான திரு. தனுஷ்கோடி, கௌரவ ஆசிரியரான திரு. ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் மீது சென்னை செஷன்சு கோர்ட்டில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அதன்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மூவரும் 3—10—67 அன்று நீதிமன்றத்திற்கு வரவேண்டுமென்று அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

# மகாத்மாவே உண்மையிடம்வெற்றி..

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

அவர் குடித்தவர் அல்லர்—குடிப்பவரும் அல்லர்—இனியும் குடிக்கமாட்டார் ; ஆனாலும், அவர், ‘ஏன் ஒவ்வொரு முறையும் நிதி வசதி கோரி டெல்லியின் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறீர்கள் ? கள்ளுக்கடைகளைத் திறந்து விடுங்கள் ; கோடிக்கணக்கான ரூபாய் கிடைக்கும்’ என்று எழுதியிருந்தார் !

மதுவிலக்குக்காக வாதாடும் குணம் படைத்த அவர், பொருளாதார நிலைமை காரணமாக எனக்கு இந்த யோசனையை எழுதியிருந்தார்.

ஆனால் அவரும், அவரைப் போன்றவர்களும், இப்போது வளர்ந்துவரும் இளைய பரம்பரையினரை மறந்துவிடுகிறார்கள் ! ‘மது என்றால் என்ன ?’—‘மதுக் கடை எப்படி இருக்கும் ?’ என்று தெரியாமல் இருந்து வருபவர்கள் அவர்கள் ! அவர்களுக்கு இவை இரண்டும் தெரியத்தான் வேண்டுமா ? மீண்டும் நமது இல்லங்களில் அழு குரல் கேட்கத்தான் வேண்டுமா? தாய்மார்கள் வேதனையால் தவிக்கத்தான் வேண்டுமா ?—பதில் சொல்லுங்கள் !

மதுவிலக்கினைச் செயல்படுத்துவதில், சில குறைபாடுகள்—இயலாமை இருக்கலாம்.

தேவாலயத்தினுள் நுழைந்து வருபவர்களெல்லாம் பத்துக் கட்டளைகளின்படி நடப்பவர்கள் அல்லர் ; அவர்களையும் அறியாமல் வழுவல்கள் இருக்கலாம் ; இருந்தாலும், ஒவ்வொரு முறையும், ‘பத்துக் கட்டளைகளின்படி நடப்பேன்’ என்று உறுதிமொழி எடுக்கத் தவறுவதில்லை !

நண்பர் செங்கல்வராயன் சொன்னதுபோல், ஆங்காங்கே சில தவறுகள் குறைகள் உண்டென்றால், அது, மதுவிலக்கின் தோல்வியல்ல—மதுவிலக்கில் மனிதன் அடைந்த தோல்வியாகும் !”

# அந்தக் குரல் ஒலிக்கும் வரையில் இங்கே ‘மது’ இருக்காது!

“நான் சிறுவனாக இருந்தபோது நடந்தது இது ; இன்னும் நன்றாக நினைவில் இருக்கிறது ; எனது உறவினர் இருவர் குடிப் பழக்கம் கொண்டவர்கள் !



“ஒருவர் நன்றாகக் குடித்துவிட்டு தெருவையே அதிர வைப்பார்—அடிபடுவார்—அடி கொடுப்பார் !

“இன்னொருவரும், ‘குடி’யைப் பழக்கமாகக் கொண்டவர்தான் ; ஆனால் இவரோ, வேறு வகை ; குடித்தவுடன் வீட்டுக்குள் வருவார்—வீட்டில் மனைவியை அதிரவைப்பார்—அடிப்பார்—அழவைப்பார்! அவர்—வெளியே நடத்துவதை, இவர்—உள்ளே நடத்துவார் !

“இதில் உச்சக் கட்டம், இவர், அவரை அழைத்து உபதேசம் செய்வதுதான் !

“ஏனப்பா, குடித்துவிட்டு வெளியேபோய் சண்டை போடுகிறாய்—சமர் கட்டுகிறாய் ?’ வீடு இல்லையா அதற்கு ? உள்ளே வா ” என்று அதட்டுவார் !

“இங்கே வீற்றிருக்கும் உங்கள்முன்—உங்கள் மூலமாக அனைவருக்கும் சொல்லிக் கொள்கிறேன்—

‘இந்தச் சம்பவம் எனது மனத்திரையிலிருந்து மறையாதிருக்கும் வரையில்—நான் கேட்ட இந்த ஒலி எனது காதுகளில் அலைமோதிக்கொண்டு இருக்கும் வரையில்—இங்கே ஒரு மதுபானக் கடைகூட திறக்கப்படமாட்டாது’ என்று !”

--முதலமைச்சர் அண்ணா

# ‘தமிழகத்தின் உண்மை.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வெட்டுகளில் காணப்படுவதையும் இலக்கிய ஏடுகளில் உள்ளதையும், இன்ன பிற சான்றுகளைக் கொண்டும் தமிழக வரலாற்றைத் தொகுத்துக்கொடுக்கும பணியைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்னும் சில திங்களில், உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது. அதற்குள் இந்தப் பணியைச் செய்து முடித்தால், வெளிநாடுகளிலிருந்து வருபவர்கட்கு, ‘இதுதான் எங்கள் நாட்டு வரலாறு’ என்று எடுத்துக்காட்ட முடியும் !

தமிழ்நாட்டில் உள்ள ஊர்களைப் பற்றியும், ஆறுகளைப் பற்றியும் வரலாறு இல்லை ; இந்த வரலாற்றை யெல்லாம் தொகுக்கின்ற பணியில் ஆர். பி. சேதுப்பிள்ளை ஆர்வம் காட்டினார். ‘அவருடைய பணி ஆகாது’ என்று கருதியோ என்னவோ—காலம் அவரை அழைத்துக் கொண்டுவிட்டது !

இத்தகைய பணியைச் செய்து முடிக்கக்கூடிய குழு ஒன்று அமைக்கப்பட்டால், அதற்குத் தலைமையாக இருந்து பணியாற்றுவதற்கு, முழுத்திறமை பெற்றவர் பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரேயாவார் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய ஒரு நல்ல காரியத்தில்—குழு அமைத்துப் பணியாற்றும் காரியத்தில்—நண்பர் மகாலிங்கமும், குன்றக்குடி அடிகளாரும் ஈடுபடுவது நல்ல பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னதுபற்றி வருத்தப்படுவதைக் காட்டிலும், இந்தப் பணியில் ஈடுபடுமாறு நண்பர் மகாலிங்கம் முன்வர வேண்டும்.